
Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk



# தமிழ்Mirror

www.tamilmirror.lk



முயற்சியினால்தான் மகவான் (இந்திரன்)
தேவர்களுக்குத் தலைவனானான்; முயற்சி போற்றிப் புகழப்படுகிறது;
முயற்சியின்மை இகழப்படுகிறது.
(தர்மபோதனை)

வெள்ளிக்கிழமை ஜூன் 21, 2024 | ஒளி: 09 கதிர்: 278 | பக்கம்:07 | ★ நகரப்பதிப்பு | FRIDAY, JUNE 21, 2024 | FREE


### இலங்கை–இந்திய உறவுகளில்

# 3 மைல்கற்கள் எட்டப்பட்டன



## இருவரும் இணைந்து திறந்து வைத்தனர்

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டொக்டர் எஸ்.ஜெய்சங்கரின் இலங்கை பயணத்தின்போது, இந்திய - இலங்கை உறவுகளில் மூன்று மைல்கற்கள் எட்டப்பட்டன. ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த ஜெய்சங்கர், ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வியாழக்கிழமை (20) சந்தித்தார்.

அதன்பின்னர் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 106 வீடுகளுக்கான நினைவுப் படிகங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் டொக்டர் ஜெய்சங்கர் கூட்டாக மெய்நிகர் ஊடாக திறந்துவைத்தனர். அத்துடன், கொழும்பு, திருகோணமலை ஆகிய நகர்களிலுள்ள மாதிரிக் கிராமத்திலும் 24 வீடுகள் மெய்நிகர் ஊடாக பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன

அத்துடன், 6 மில்லியன் டொலர் இந்திய நிதியுதவியுடன் இலங்கையில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை (MRCC) உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிப்பதைக் குறிக்கும் நினைவுப் படிகம் மெய்நிகர் ஊடாக திறந்து வைக்கப்பட்டது. தொடர்ச்சி P2



# “இந்தியாவுக்கு மிகுந்த நல்லெண்ணம் உள்ளது”

இலங்கை போன்ற அயல் நாடுகள் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானவை என்றும் இந்தியாவுக்கு இலங்கை மீது மிகுந்த நல்லெண்ணம் இருப்பதாகவும் அமைச்சர் ஜெயசங்கர் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கூறினார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பு, அலரி மாளிகையில் வியாழக்கிழமை (20) நடைபெற்றது.

பாரதீய ஜனதா கட்சித் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் வெற்றி தொடர்பில் கலாநிதி ஜெய்சங்கருக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர், தொடர்ச்சி P2

# ஜெய்சங்கர் வந்தது ஏன்?

இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து பாரதூரமான சில வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள இந்தியா திட்டமிடுவதாக தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதனால் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்தே விமல் வீரவன்ச இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் சில மணித்தியாலங்கள் தங்கியிருப்பதற்காக இலங்கை வருகின்றார்.



தொடர்ச்சி P2



# நாகபூசணி அம்மன் இரதோற்சவம்...

யாழ்ப்பாணம்–நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் இரதோற்சவ பெருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் பக்தி பூர்வமாக வியாழக்கிழமை (20) இடம்பெற்றது.

– நிதர்ஷன் வினோத்

# “இந்தியாவை மீறி எதுவுமே அசையாது”

இந்தியாவை மீறி எந்தவொரு நாடும் இலங்கைப் பிரச்சினையில், தமிழ் மக்களின் இனப் பிரச்சினையில் தலையிட முடியாது. அவ்வாறு தலையிடுவதானால் அது இந்தியாவுக்குப் பின்னர்தான், இந்தியாவுக்குத்தான் முதலிடம். இந்தியாவை மீறி இங்கு எதுவுமே அசையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான வினோநோகராத லிங்கம் தெரிவித்தார்.

இதுதான் உண்மை, யதார்த்தம்.

இதனை விமல் வீரவன்ச போன்ற இனவாத சிந்தனையுடையவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



தொடர்ச்சி P2



# சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் குதிப்பு

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், வியாழக்கிழமை (20) முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில், பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் ஈடுபட்டுள்ளதாக, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரீ.எம். தாஜுதீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள், தங்களுடைய சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கையை முன்வைத்துக் கடந்த 50 நாட்களாக அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைப்பு, தொடர்ச்சி P2

# “ஒட்டிப்பிறந்த பிள்ளைகளை பிரித்து உயிர்களை காக்கவும்”

அரநாயக்க பகுதியில் ஒட்டிப் பிறந்த பிள்ளைகளைப் பிரித்து அவர்களின் உயிர்களைக் காக்கத் தேவையான நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் சுகாதார அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்து அவர் இதனை கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், அரநாயக்க பகுதியில் பிறக்கும் போதே ஒட்டிப் பிறந்த இரண்டு குழந்தைகள் உள்ளன. இருவருக்கும் இரண்டு சிறுநீரகங்களே இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஒட்டியுள்ள அவர்கள் இருவரையும் நான்கு வயதுக்கு முன்னர் பிரிக்க வேண்டும்.



தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கு மக்களின்

# அனுமதியுடனேயே காணிகள் சுவீகரிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் பொதுமக்களின் அனுமதியுடன் தான் அளவீடு செய்யப்பட்டு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படுவதாகக் காணி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட தொடர்ச்சி P2



# ரணிலுக்கு முடியாதாம்; பீட்டருக்கு முடியுமாம்

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மாற்ற முடியாது என்று ஜனாதிபதி கூறுகிறார்.ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி பீட்டர் ப்ரூவருடன் ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடிய போது சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மீளாய்வு செய்வதற்குக் கூட அவர் இணக்கம் தெரிவித்தார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், வாடகை வருமான வரி குறித்து சமூகத்தில் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. தொடர்ச்சி P2

### நுழைவாயில் வரவேற்பு வளைவு

# இடைக்காலத் தடையுத்தரவு நீடிப்பு

■ பாறுக் ஷிஹான்

வீரமுனை கிராமத்திற்கான நுழைவாயில் வரவேற்பு வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இரு தரப்பின் வாதப்பிரதிவாதங்களின் பின்னர் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை கிராமத்திற்கான நுழைவாயிலில் வரவேற்பு வளைவு அமைப்பிற்கான பணிகள் வீரமுனை மக்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான தடையுத்தரவொன்றினை கடந்த 15ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸார் நீதிமன்றில் பெற்றிருந்தனர்.

வீரமுனையில் வரவேற்பு வளைவு அமைப்பதான நிகழ்வானது இனமுரண்பாட்டை இன வன்முறையினை ஏற்படுத்தும் என சம்மாந்துறை பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுக் குறித்த தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.



தொடர்ச்சி P2

# 3 மைல்கற்கள் எட்டப்பட்டன



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டொக்டர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைத்தனர். இதில் கொழும்பில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் ஒரு மையம், ஹம்பாந்தோட்டையில் துணை மையம், காலி, அருகம்பே, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்லாறு, பருத்தித்துறை, மொல்லிக்குளம் ஆகிய பிரதேசங்களின் ஆள்ளில்லா கட்டுப்பாட்டு மையங்களும் அடங்கும்.



# "இந்தியாவுக்கு மிகுந்த நல்லெண்ணம் உள்ளது"

நெருக்கமான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இணைந்து பணியாற்றுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை உறுதி செய்தார். கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் அண்மைய நெருக்கடியான காலங்களில் இந்தியா அளித்த ஆதரவிற்குப் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர், "அயலவருக்கு முதலிடம்" என்ற கொள்கையை இந்திய அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்றும் தனது நெருங்கிய சமுத்திர அயல் நாடான இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதை வலியுறுத்துவதே தனது பயணத்தின் முக்கிய நோக்கம் என்றும் வலியுறுத்தினார்.

நாட்டில் இந்திய முதலீடுகள், அபிவிருத்தித் திட்டங்கள், இணைப்புத் திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பு குறித்து பிரதமரும் இந்திய அமைச்சரும் கலந்துரையாடினர்.

# ஜெய்சங்கர் வந்தது ஏன்?

அவரின் விஜயம் தொடர்பில் எமக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய ஆட்கள் பதிவு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய அடையாள அட்டையைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம், அதானியின் மின்சக்தி வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட 10 அல்லது 12 வேலைத் திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற்காகவே அவர் இங்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இந்தியப் பிரதமரும் இங்கே விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சில விடயங்கள் தொடர்பில் எங்களுக்குத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. அதாவது இந்திய வெளிவிவகார அமைச்சர் சில மணித்தியாலங்களுக்கு தங்கியிருக்கவென இங்கு வருவது ஏன்? இந்தியாவுடனான அந்த 12 வேலைத்திட்டங்களும் என்ன? இவற்றை அழுத்தம் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முன்னெடுக்கும் முயற்சிகள் தொடர்பில் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் அரசாங்கத் தரப்பினர் கூறுவது என்ன என்று இந்த சபையில் அறிந்துகொள்ள எதிர்பார்க்கின்றோம்.

இதில் உள்ள பாரதூரமான விடயம் உள்ளது. 10 அல்லது 12 வேலைத்திட்டங்களில் அடையாள அட்டை தொடர்பான வேலைத்திட்டம் பாரதூரமானதே. அதாவது ஆட்கள் பதிவு திணைக்களத்திடம் இருக்க வேண்டிய அனைத்து தகவல்களும் இந்திய நிறுவனத்திடம் சென்றுவிடும். அத்துடன் நாங்கள் பொருளாதார ரீதியில் நாங்கள் வீழ்ந்துள்ள நேரத்தில் எமது பக்கத்து நாடு எமது நாட்டுக்கு அழுத்தம் கொடுத்து கழுத்தை நெரித்து இவ்வாறான பிரச்சினைக்குரிய முயற்சிகளை முன்னெடுப்பது பாரதூரமானதே. இதனால் இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சராவது பதிலளிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம் என்றார்.



# அனுமதியுடனேயே காணிகள் சுவீகரிப்பு

எம்.பியான இம்ரான் மஹ்ரூப் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் இறக்கக்கண்டி, புல்மோட்டை, கிண்ணியா, மூதூர் மற்றும் தோப்பூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள காணிகள் அவற்றின் உரிமையாளர்களின் அனுமதியுடனும், முன்னறிவித்தலுடனும் இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்படுகின்றன. இதற்கமைய வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் அண்மைக்காலமாக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. காணி தொடர்பில் உறுதியான தீர்மானத்தை எடுப்பதற்காகக் காணிகள் அளவீடு செய்யப்படுகின்றன என்றார்.

காணி சுவீகரிப்பினால் அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கும், இதர செயற்பாடுகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான தரிசு காணிகள் ஒரு சில தரப்பினரால் தனிப்பட்ட முறையில் கையகப்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

ஆகவே காணி முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்குக் காணி அமைச்சின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.



# "இந்தியாவை மீறி எதுவுமே அசையாது"

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இலங்கைக்கு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு நாள் விஜயமாக வருகை தந்துள்ளார். அவரது விஜயத்தைக் கண்டு இந்த பாராளுமன்றத்திலுள்ள சிலர் அச்சப்படுகின்ற, சந்தேகப்படுகின்ற நிலைமையைக் காணக்கூடியதாகவுள்ளது. பொதுவாக இந்தியா என்று சொன்னால் தமிழில் ஒரு பழமொழி உள்ளது அது

"வேண்டாப் பொண்டாட்டி கைப்பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்" என்பது. அதுபோன்று தான் இங்கே இருக்கின்ற சிலர் குறிப்பாக இனவாத பார்வை பார்க்கின்ற அரசியல் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு எதிராகக் கொக்கரிக்கத்தொடங்கி விட்டார்கள்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரைக்கண்டு இவர்களுக்கு அச்சம், சந்தேகம் என்று சொன்னால் விரைவில் இலங்கை வர இருக்கின்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் பார்த்து எந்தளவுக்கு அச்சம் கொள்ளப்போகின்றனர் என்பதை நாங்கள் சொல்லத் தேவையில்லை.

இந்தியா இடது அயல் நாடு. ஆபத்துக்கு உதவிய நாடு. தொடர்ந்தும் உதவிக்கொண்டு இருக்கின்ற நாடு. எந்த ஆபத்துக்கும் எதிர்காலத்தில் உதவி செய்யக்கூடிய நாடு. அவ்வாறான நாட்டின் பிரதிநிதிகள் இங்கு வருகின்றபோது எதற்காக இப்படிக் கூக்குரலிடுகின்றார்கள்? அவர்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக, இலங்கைக்கு உதவ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு வருகின்ற வேளையில் வேறு கண்ணோட்டத்தோடு, பார்க்கின்ற இவர்களினால்தான் சிங்கள மக்கள் கூட இந்தியாவை ஒரு எதிரி நாடாகப் பார்க்கின்ற சூழல் இருக்கின்றது.

இந்த சபையில் கூட இன்று (நேற்று ) விமல் வீரவன்ச, ஜெய்சங்கர் ஏன் வருகின்றார்? அவரின் நோக்கம் என்ன? அவரின் பின்னால் மறைமுக கரங்கள் உள்ளனவா?என்று கேள்வி எழுப்புகின்ற அளவுக்கு இந்தியாவுக்கு எதிரான நிலைமை இருக்கின்றது, இவ்வாறு இவர்கள் தவறாக சிங்கள மக்களை வழிநடத்துவதனால் தான் சிங்கள மக்களும் இந்தியாவை எதிரியாகப் பார்க்கின்றார்கள். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்தியாவை மீறி எந்தவொரு நாடும் இலங்கைப் பிரச்சினையில், தமிழ் மக்களின் இனப்பிரச்சினையில் அல்லது அபிவிருத்தி, பொருளாதாரம் சார்ந்த விடயங்களில் முதலில் தலையிட முடியாது. அவ்வாறு தலையிடுவதானால் அது இந்தியாவுக்குப் பின்னர்தான், இந்தியாவுக்குத்தான் முதலிடம். இந்தியாவை மீறி இங்கு எதுவுமே அசையாது. இதுதான் உண்மை, யதார்த்தம். இதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, இந்தியாவின் தலைவர்கள் வருகின்றபோது அதற்கு எதிராகக் கருத்துக்கள் கூறுவதனை, சந்தேகிப்பதை விமல் வீரவன்ச போன்ற இனவாத சிந்தனையுடையவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

# "ஒட்டிப்பிறந்த பிள்ளைகளை பிரித்து உயிர்களை காக்கவும்"

3 வருடங்களாக இணைந்துள்ள இந்த பிள்ளைகளுக்கு சத்திரச் சிகிச்சை செய்வதற்காக விசேட வைத்திய நிபுணர்களை அங்கு அனுப்பி அவர்களுக்கு வழங்கக்கூடிய மருத்துவ வசதிகள் மற்றும் அவர்களைப் பிரித்தெடுத்து அவர்களின் உயிர்களைக் காக்கும் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

அதற்குப் பதிலளித்த சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல கூறுகையில்,

இந்த விடயம் தொடர்பில் அறிந்துகொண்டேன். அந்த பிள்ளைகளின் உடல்கள் இரண்டும் ஒன்றாக இணைந்திருப்பது மாத்திரமன்றி, உடல் அவயங்கள் தொடர்பிலும் சிக்கல்கள் உள்ளன. அவற்றைப் பொருத்துவது சாதாரண சத்திர சிகிச்சைகளைச் செய்வது போன்றதல்ல. இதனால் இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடம் அதற்குத் தேவையான வசதிகள் உள்ளனவா? என்று கேட்டுள்ளேன். அது தொடர்பில் அறிந்துகொண்டு அறிவிக்கின்றேன் என்றார்.



# சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் குதிப்பு

மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்காமை, பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாமலுள்ள சம்பள அதிகரிப்பை வழங்கக் கோரியும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதிய அதிகரிப்புச் செய்ய வலியுறுத்தல், பல்கலைக்கழகங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பி நிருவாக விடயங்களை சுமுகமாக முன்னெடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளல், பல்கலைக்கழக ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தைச் சீராக்குதல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தும் இது வரை தீர்த்து வைக்கப்படவில்லையெனத் தெரிவித்தார்.

நீண்ட காலமாக இருந்து வரும் எமது கோரிக்கைகளுக்குச் சம்மந்தப்பட்ட தரப்பினர்களால் தீர்வு வழங்கப்படாமையினால் இதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# ரணிலுக்கு முடியாதாம்...

இந்நாட்டில் வரிக் கொள்கையின் அடிப்படையில் நிதி தரவுகள் மற்றும் தகவல்களை சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ள போதிலும், இந்த சொத்து வரி அல்லது வேறு வரிகளை அதிகரிக்கும் போது தயாரிக்க வேண்டிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு அறிக்கை இன்னும் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் இந்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய முடியும் என்று கூறும்போது, அதைத் திருத்த முடியாது என்று ஜனாதிபதி கூறுகிறார். சர்வதேச நாணய நிதியத்தின் உடனான ஒப்பந்தம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது. தாம் விரும்பும் வகையில் மக்கள் மீது வரிகளைச் சுமத்த முடியாது என்பதனால், வரி அறவிடுவதற்கான காரணங்களையும், தொழில்நுட்ப ஒத்துழைப்பு அறிக்கைகளையும் முன்வைக்குமாறு கோருகின்றேன்.

வரி நிர்வாகத்தை டிஜிட்டல் மயமாக்குவதுடன், வரி வலைக்கு வெளியே இருப்பவர்களையும் வரி வலையில் உள்ளடக்குமாறும், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கைப்பாவையாக இருக்காது, நாட்டுக்கு ஏற்ற உடன்படிக்கையை எட்டுமாறும் கோருகின்றேன் என்றார்.

# இடைக்காலத் தடையுத்தரவு நீடிப்பு

மேற்குறித்த வழக்கு புதன்கிழமை(19) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி டி.கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, மன்றில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிர்வாகம் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பே.பிரேம்நாத் ஆஜராகியிருந்தார்.

இதன்போது இரு சாராரின் விண்ணப்பங்கள் சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிவான் குறித்த வழக்கினை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்தார்.





# நாகபூசணி அம்மன் ஆலய மஹோற்சவ பெருவிழா

■ நிதர்ஷன் வினோத்

வரலாற்றுச் சிறப்பு யாழ்ப்பாணம் - நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் இரதோற்சவம் வியாழக்கிழமை (20) காலை வசந்த மண்டப பூசைகளுடன் ஆரம்பமாகியது.

16 தினங்களைக் கொண்ட ஆலய மஹோற்சவம் கடந்த 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வியாழக்கிழமை (20) இரதோற்சவம் நடைபெற்ற நிலையில் வெள்ளிக்கிழமை(21) தீர்த்தோற்சவமும், திருவூஞ்சலும் நடைபெற உள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை ( 22) இரவு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (23) தெப்போற்சவம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









விசேட பாதுகாப்புடன்

# குருந்தூருக்கு பிக்குகள் பாதயாத்திரை

முல்லைத்தீவு-குருந்தூர் மலை பகுதியில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் பிக்குகள் பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி தொடக்கம் மகியங்கனையிலிருந்து பாத யாத்திரையை ஆரம்பித்த பிக்குகள் குழு வியாழக்கிழமை(20) முல்லைத்தீவு மாவட்டத்தை அடைந்து, முல்லைத்தீவு-குருந்தூர் மலையை நோக்கிச் செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது.



யாத்திரைக்கான பயண வழியெங்கும் பொலிஸ் பாதுகாப்பு இடப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக, அளம்பில் சந்தியை அண்டிய பகுதியில் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருப்பதுடன், அப்பகுதியில் வீதித் தடுப்புக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், பொலிஸாரின் பாதுகாப்புடன் தென்பகுதி மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் இருந்து வருகைதந்த பௌத்த மக்கள் வீதியின் இரு புறங்களிலும் பௌத்த மத கொடிகளை ஏற்றி, கூடாரங்களையும் அமைத்துள்ளனர்.

## இளைஞன் அடித்துக் கொலை; இருவர் தலைமறைவு

■ எம்.றொசாந்த்

யாழ்.- நெடுந்தீவு ஏழாம் வட்டார பகுதியில், இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை (19) இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவு 07 வட்டாரத்தைச் சேர்ந்த சமக்கீன் தேவராஜ் அருள்ராஜ் என்ற 23 இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கிடையே காணப்பட்ட முற்பகையால் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே குறித்த கொலைக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர்



தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சிகிச்சை பெற்று வந்த சாரதி மரணம்

தியகல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்து, சிகிச்சை பெற்று வந்த வேன் சாரதி, சிகிச்சை பலனின்றி புதன்கிழமை (19) இரவு உயிரிழந்ததாக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

32 வயதுடைய நிர்மலராஜன் பிரியதர்ஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி கண்டியில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் ஹட்டனில் இருந்து கினிகத்ஹேன சென்ற வேனும் நேருக்கு நேர் மோதியே இவ்விபத்து இடம்பெற்றது.



விபத்தில் காயமடைந்த வேன் சாரதி கினிகத்ஹேன மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

## சாரதி இன்றி ஓடிய ஓட்டோ: நால்வருக்கு காயம்

பதுளை-மஹியங்கனை பிரதான வீதியின் மீகஹகிவுல பிரதேசத்தில் வியாழக்கிழமை (20) பிற்பகல் முச்சக்கரவண்டி ஒன்று 30 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் மூன்று பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்து மீகஹகிவுல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகஹகிவுல நகரிலிருந்து பொல்கஹராவ கிராமத்தை நோக்கிச் சென்ற இந்த முச்சக்கரவண்டியின் சாரதி ஏதோ தேவைக்காக முச்சக்கரவண்டியை கடையொன்றுக்கு அருகில் நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்கிச் சென்று விட்டார்.

அதேநேரம், முச்சக்கரவண்டி சாரதியின்றி ஐம்பது அடிகள்




முன்னால் சென்று, முன்னால் இருந்த 30 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்துக்கு உள்ளானது.

சம்பவத்தன்று மெகஹகிவுல நகரில் இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகள் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாற்றுத்திறனாளிகள் இருவர் காயமடைந்தவர்களில் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வாகன விபத்தில் நால்வர் காயம்

பிலியந்தலையிலிருந்து தியகட நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று புதன்கிழமை(19) பிற்பகல் கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில், இ.போ.ச பேருந்து சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலுக்கு கருணா ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் எனப்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகர் மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை தல்பிட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். கடந்த காலம் அனைவருக்கும் தெரியும். முன்னாள் ஜனாதிபதி அனைத்து துறைகளையும் அழித்தார்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னரே நாம் நல்லதொரு நிலையை அடைந்துள்ளோம்.

குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்கத் தயாராக உள்ளனர். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.அதனால்தான் அனைத்து மக்களும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளோம், அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எமது கட்சி ஆதரவளிக்கிறது என்றார்.

## சிறுமியை கர்ப்பமாக்கியவர் கைது

நானுஓயா- வாழமலை தோட்டத்தில் 15 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் எனவும் பாதிக்கப்பட்ட சிறுமி நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை அனுமதித்துள்ளதாகவும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தனது வீட்டில் சிறிய வர்த்தக நிலையம் ஒன்று நடத்தி வருவதாகவும் சிறுமி வர்த்தக நிலையத்திற்குச் சென்றபோது அவரை அழைத்து சென்று பாலியல் வன்புணர்வு செய்துள்ளார் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.


## திடீர் தீ விபத்து; ஐவர் பாதிப்பு


■ ஆ.ரமேஸ், துவாரகஷான், செ.தி.பெருமாள்

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிலாஸ்கோ தோட்டப் பிரிவான நெதஸ்டல் தோட்டத்தில் வியாழக்கிழமை(20) அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 20 வீடுகள் கொண்ட தொடர் குடியிருப்பு தொகுதியில் உள்ள வீடொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் இந்த வீட்டில் வசித்து வந்த, குழந்தை பெற்று சில நாட்களான தாய் ஒருவர் உட்பட ஐவர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த தீ பிடிப்பு சம்பவத்தை அறிந்த அயலவர்கள், தோட்ட பொதுமக்கள் ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் அதிரடியாக நடவடிக்கையில் ஈட்டுப்பட்டுள்ளதால் பாரிய பாதிப்பு





தவிர்க்கப்பட்டுள்ளது.

தீ பிடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டு நிர்கதிக்குள்ளாகியுள்ள ஐவரை பாதுகாப்பாக உறவினர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நிறைவேற்று அதிகாரமா? நீதியின் அதிகாரமா?

சில காலமாகவே நீதித் துறைக்கும், நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையே ஒரு விதமான பனிப்போர் மறைமுகமாக நிகழ்வதை அவதானிக்க முடிகின்றது. அரசியலமைப்பின் பிரகாரம், இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல வேண்டியுள்ள நிலையில், அதனை மேலும் ஒரு வருட காலத்துக்கு பிற்போடச் செய்து தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியில், தமக்கு அதிகளவு அதிகாரம் உள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில், நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புகளைக் கவனத்தில் கொள்ளாமல், தமக்கு விரும்பியவாறு அதில் மாற்றங்களை மேற்கொள்ளும் வகையிலான நடத்தைகள் முன்னெடுக்கப்படுவதைக் காண முடிகின்றது.

பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் இந்த முறைமை ஆரம்பித்திருந்தது. குறிப்பாக, பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுபவர் எவ்விதமான சட்டப்பூர்வமான தண்டனைகளுக்கும் ஆளாகாதவராக இருக்க வேண்டும். ஆனாலும், அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்மானித்ததன் பின்னரே, இடைக்கால பொலிஸ் மா அதிபராக இருந்தவர், முழுமையான நியமனத்தைப் பெற்றுக் கொண்டார்.

அதுபோலவே, நிகழ்நிலை காப்புச் சட்டத் திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொண்டு அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேற்ற வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையில், அந்த உத்தரவை மீறி, குறித்த பரிந்துரைப்புகளில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமலே சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சபாநாயகர் என்பவர் பாராளுமன்ற அமர்வுகளின் போது, இரு தரப்பினருக்கும் நடுநிலையானவராக இருந்து செயலாற்ற வேண்டியவராக இருந்தாலும், அவரின் விசேட தீர்மானங்களினூடாக இந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இதேபோல, இந்த வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் உரையின் போது, உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த பால் நிலை சமத்துவம் தொடர்பான தீர்ப்பைப் பின்பற்ற வேண்டியதில்லை எனும் வகையில் கருத்தை முன்வைத்திருந்தார்.

இவ்வாறான செயற்பாடுகளினூடாக, ஜனாதிபதி தமது பதவிக் காலத்தை நீடித்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துகின்றரா? அதற்கு எதிராக உயர் நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்புடன், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என தீர்ப்பளித்தால், எதிர்த்தரப்பிலுள்ள உறுப்பினர்களை உள்வாங்கி, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மட்டும் காண்பித்து, தமது பதவிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் முயற்சிக்கான ஒரு முன்னாயத்த செயற்பாடாக அமைந்திருக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த அரசாங்கத்தின் மீது பொது மக்கள் மத்தியில் திருப்தி இல்லை என்பது தெளிவாகின்றது.

தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான உறுப்பினர்கள் இன்னொரு தேர்தலினூடாக மீண்டும் பாராளுமன்றத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்படுவார்களா என்ற சந்தேகமும் காணப்படும் நிலையில், பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தையும் ஒருவருடத்தால் நீடிப்பது தொடர்பான வாக்குறுதியை ஜனாதிபதி வழங்கக்கூடும். இவ்வாறான பல ஊகங்களை, இந்த வாரம் ஜனாதிபதியின் பாராளுமன்ற உரை தோற்றுவித்துள்ளது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 4

# இலங்கையின் மதச்சார்பின்மைக்கான சவால்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த ஒரு நூற்றாண்டுகால இலங்கை அரசியலில் பௌத்த மதத்தின் வகிபாகம் பெரிது. குறிப்பாக கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலங்கைச் சமூகத்தின் அசைவியக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் தீர்மானகரமான சக்தியாக பௌத்தம் அதியுச்ச வளர்ச்சியைக் கண்டுள்ளது. இது இலங்கையின் பல்லின பல்பண்பாட்டுத் தன்மையைச் சவாலுக்குள்ளாக்கியுள்ளது. போருக்குப் பிந்தைய இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு முக்கிய தடைக்கல்லாக மதம் இருந்து வருகிறது. இலங்கையின் மதச்சார்பின்மையின் முக்கியத்துவத்தும் முன்னெப்போதையும் விட இப்போதே அதிகமாக உணரப்படுகிறது.

1972இல் பௌத்தம் இலங்கையின் 'முக்கிய மதமாக' அறிவிக்கப்பட்டபோது இந்த நிலைப்பாடு அரசியலமைப்பு மயமாக்கப்பட்டது. இந்த கட்டத்தில், பௌத்த சங்கத்தின் தீவிர மற்றும் சமூக மாற்றும் இழையானது புதிதாக உருவான பௌத்த நீரோட்டத்தில் முழுமையாக உள்வாங்கப்பட்டது. அதன் முன்னணி செயற்பாட்டாளர்கள் பலர் சிங்கள-பௌத்த புள்ளியியல் தேசியவாதத்தின் அறிவுசார் பணியாளர்களாக அல்லது சிங்கள அரசியல் வர்க்கத்தின் அதிகார தரகர்களாக மாறினர்.

1972இல் இலங்கை தனது குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்றியபோது, நாட்டின் தலைவர்கள் பௌத்தத்திற்கு 'முக்கிய அந்தஸ்து' வழங்கினர். இந்த சிறப்புரிமை 1978 அரசியலமைப்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது, இது நாட்டின் குடிமக்களின் மத சுதந்திரத்திற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. 2007இல், ஒலி மாசுபாடு தொடர்பான தீர்ப்பின் ஒரு பகுதியாக, பௌத்தர்களில் பெரும்பான்மையானவர்கள் இப்போது தங்கள் மதத்தின் முதன்மையான அந்தஸ்தைப் புனிதமாகக் கருதினாலும், தீவு ஒரு 'மதச்சார்பற்ற நாடு' என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால், நடைமுறையில் இலங்கை மதச்சார்பற்ற நாடல்ல என்பதை நிகழ்வுகள் காட்டுகின்றன.

இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் மதச்சார்பின்மை சாத்தியமா என்ற வினா முக்கியமானது. குறிப்பாக மதச்சார்பின்மை என்ற எண்ணக்கரு ஐரோப்பாவில் புரட்டஸ்தாந்தின் வளர்ச்சியுடன் தோற்றம் பெற்று 18ஆம் நூற்றாண்டில் முன்னிலைக்கு வந்தது. அடக்குமுறை முடியாட்சிகளுடன் தொடர்பு கொண்ட பரவலாக ஊழல் நிறைந்த கத்தோலிக்க திருச்சபை மற்றும் தேவாலயத்தை அரசிலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதைச் சாத்தியப்படுத்த அரசுகளை மதச்சார்பற்றவையாக மாற்ற இயலுமானது. ஆட்சியாளர்களும் ராஜ்யங்களும் மதத்தின் இன்றியமையாத புரவலர்களாகச் செயல்பட்ட தெற்காசியாவில் இதேபோன்ற ஏற்பாடு சாத்தியமா என்ற வினா இன்றளவும் வினவப்படுகிறது. 1972இல் இந்தியா தன்னை 'மதச்சார்பற்ற நாடு' என்று அறிவித்தது.

தெற்காசியாவில் சிறுபான்மை நல்வாழ்வை அச்சுறுத்தும் விதங்களில் மதத் தேசியவாதம் பன்மைத்துவ நடைமுறைகளைக் குறை மதிப்பிற்கு உட்படுத்துவது வரலாறெங்கும் நிகழ்ந்துள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலும், மதச்சார்பின்மை மற்றும் மத சுதந்திரத்தின் கோரிக்கைகள் இருந்தபோதிலும், சிறுபான்மையினர் அவ்வப்போது வன்முறையை எதிர்கொள்கின்றனர். இரு நாடுகளிலும் செழித்து வரும் இஸ்லாமிய வெறுப்பு இதற்கு இன்னொரு புதிய பரிமாணத்தை வழங்கியுள்ளது. பெரும்பான்மையான சிங்களவர்கள் முக்கியமாகப் பௌத்தர்களாகவும், தமிழர்கள் பிரதானமாக இந்துக்களாகவும் இருந்த போதிலும், இரு குழுக்களுக்கிடையில் கிட்டத்தட்ட மூன்று தசாப்த கால மோதலுக்கு இனப் பிளவுகள் வழிவகுத்தன. பௌத்த தேசியவாதிகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அணிதிரட்ட மதத்தைப் பயன்படுத்தினர். புலிகள் சில சமயங்களில் பௌத்த பிக்குகளைக் கொன்றனர், வழிபாட்டுத் தலங்களைத் தாக்கினர். ஆனால் இலங்கைத் தீவின் மோதல் ஒரு மதப் போர் அல்ல. அது இனத்துவத்தை மையமாகக் கொண்டது. ஆனால், பௌத்தம் அதைத் தனது இருப்புக்கும் அரசியல் வளர்ச்சிக்கும் பயன்படுத்தியது. ஆனால், போருக்குப் பிந்தைய முரண்பாடுகளில் மதம் பிரதான இடம் வகிக்கிறது. குறிப்பான முஸ்லீம் விரோத உணர்வின் மையமாகப் பௌத்த-இஸ்லாம் மோதலைக் கருதவியலும்.

சிங்கள-பௌத்த தொன்ம-வரலாறு, இலங்கை என்பது, சிங்கதீபா (சிங்களவர்களின் தீவு) மற்றும் தம்மதீபா (புத்தரின் போதனைகளைப் பாதுகாக்கவும் பாதுகாக்கவும் வடிவமைக்கப்பட்ட தீவு) என்று தவறாக விளக்கப்பட்டுள்ளது. இந்துத்துவாவைப் போன்றே அடுத்தடுத்து வரும் சிங்களத்வா சித்தாந்தம், இலங்கை சிங்கள- பௌத்தர்களுக்குச் சொந்தமானது, சிறுபான்மையினரே பெரும்பான்மை சமூகத்தின் துன்பங்களுக்குக் காரணம்,தீவு ஒரு ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பைப் பேண வேண்டும் என்ற வலியுறுத்தல், மேலும் அதிகாரப் பகிர்வுக்கு மாறாக, அதன் ஒன்பது மாகாணங்களையும் பெரும்பான்மையான பௌத்தர்களாக்க வேண்டும் என்ற அபிலாஷைகள் இந்தக் கருத்தியலில் இருந்து உருவாகின்றன.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், அரசியல் ஈடுபாடு கொண்ட தீவிர முற்போக்கான பௌத்த இயங்கியலானது அதன் செயற்திட்டத்தை எந்த குறிப்பிடத்தக்க அரசியல் விளைவுகளுக்கும் கொண்டு செல்லாமல் மறைந்து வெகு காலத்திற்கு முன்பே பௌத்த பிரதான நீரோட்டத்தில் மறைந்தது ஏன்? மார்க்சியத்தால் ஈர்க்கப்பட்ட தீவிர துறவிகள் கூட சமூகத்திற்கும் தேசியத்திற்கும் இடையிலான தொடர்பைப் பிரிக்கவில்லை அல்லது மறுபரிசீலனை செய்யவில்லை. சமத்துவமின்மை பற்றிய சமூகப் பிரச்சினைக்கான அர்ப்பணிப்பின் அரை மனதுடன் தெளிவற்ற வரையறுக்கப்பட்ட உச்சரிப்பு அவர்களுடையது. முரண்பாடாக, இந்த தீவிர துறவிகள் அனைவரும் இலங்கை பௌத்த பிக்குகளின் உயர் சாதி சகோதரத்துவமான கண்டியின் சியாமிய சகோதரத்துவத்தைச் சேர்ந்தவர்கள். சாதியால் பிளவுபட்ட சிங்கள சமூகத்திற்குள் சமூக சமத்துவத்திற்கான எந்தவொரு சமூக இயக்கத்துடனும் அவர்கள் யாரும் இயல்பாக இணைக்கப்படவில்லை. தொடக்கத்தில், கொலனித்துவ காலத்தின் பிற்பகுதியில் இலங்கையில் இடதுசாரிகள் தலைமையிலான தொழிலாள வர்க்க இயக்கங்களைத் தவிர, அத்தகைய சமத்துவ சமூக இயக்கங்கள் எதுவும் இல்லை.

1948 சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் அரசியல் மாற்றம் அதன் ஜனநாயகத்தின் ஆழமான நெருக்கடியால் குறிக்கப்பட்டுள்ளது. இன மற்றும் கலாசார சிறுபான்மையினரின் அந்நியப்படுத்தல் மற்றும் இறுதியில் இன மோதல் மற்றும் பிரிவினைவாத உள்நாட்டுப் போரின் தோற்றம் ஆகியவற்றுடன் அரசின் பெரும்பான்மையான மாற்றத்தில் நெருக்கடி அதன் வெளிப்பாட்டைக் கண்டது. இந்த ஜனநாயக நெருக்கடிக்கு சிங்கள-பௌத்த தேசியவாத சித்தாந்தமும் சமூக சக்திகளும் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது. இந்த ஜனநாயக நெருக்கடிக்கு இலங்கையின் அரசியல் பௌத்தமானது சிங்கள பௌத்த பேரினவாத அகங்காரத்தின் வழியே பதிலளிக்க முனைந்துள்ளது. இது போருக்குப் பிந்தைய சூழலிலும் இனங்களுக்கிடையிலான சமாதான சகவாழ்வைச் சாத்தியமற்றதாக்கியுள்ளது.

1950 முதல் 1970 வரையிலான காலத்தில், புத்தமதத்தின் தேசிய மற்றும் அடையாள அரசியலின் மறு உறுதிப்படுத்தல் நிகழ்ந்தது. இது பெரும்பான்மை ஜனநாயகம் மற்றும் ஒற்றையாட்சியின் நியாயத்தன்மை மற்றும் புனிதத்தன்மையை மீண்டும் வலியுறுத்தியது. குடியுரிமை பற்றிய பிரச்சினையில், பெரும்பான்மையான சிங்கள பௌத்தர்களுக்கான குழு உரிமைகள் பற்றிய அணுகுமுறையையும் சிறுபான்மை இனத்தவர்களுக்கான தனிப்பட்ட உரிமை பற்றிய அணுகுமுறையையும் மையப்படுத்திய பேச்சுக்களை அது கட்டமைத்தது. இலங்கையின் 1972 மற்றும் 1978 அரசியலமைப்புகள், பௌத்தத்தின் இந்த தேசியவாத அரசியல் இறையியலை மீண்டும் உறுதிப்படுத்திய தருணங்கள், அரசியலமைப்பு வாதத்தின் தாராளவாத மற்றும் தாராளவாத முன்னுதாரணங்களின் கலவையுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

1980களில் நியாயமான போர் என்ற பௌத்த கோட்பாட்டை உருவாக்குவதற்கான ஒரு வாதத்தை அது உருவாக்க முயற்சித்தது. சிங்கள-தேசியவாத சிந்தனையின் ஜாதிக சிந்தனைப் பள்ளியானது, இருபதாம் நூற்றாண்டின் பௌத்த அரசியல் தர்மத்தை மிகவும் தீவிரமான போர்க்குணமிக்க மறுகட்டமைப்பிற்காக வாதிட்ட முன்னணி அறிவுசார் நீரோட்டமாகும். ஜாதிக சிந்தனை குழுவின் அரசியல் கிளையான ஜாதிக ஹெல உறுமய, அதன் இளம் பௌத்த பிக்குகள் சிலரை நியமித்து,கொலனித்துவத்திற்கு முந்தைய சிங்களவர்களுடன் உரையாடலில் புத்தரின் மதச்சார்பற்ற கருப்பொருள்களில் அவ்வப்போது போதனைகளை மறுவிளக்கம் செய்து, நியாயமான போர் பற்றிய விரிவான பௌத்த கோட்பாட்டை உருவாக்கியது. அத்தகைய கோட்பாட்டின் கூறுகளைக் கொண்ட பௌத்த வரலாற்று நூல்கள் மறுபிரசுரம் கண்டன. ஜாதிக சிந்தனை மற்றும் ஜாதிக ஹெல உறுமய புத்திஜீவிகள் இருவரும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் இந்துத்துவ நியாயமான போர்க் கோட்பாடுகளின் அதே அரசியல் ஈர்ப்பையும் விளைவையும் கொண்டிருக்கக்கூடிய நியாயமான போர்க் கோட்பாட்டை உருவாக்குவதன் மூலம் பௌத்த அரசியல் தர்மத்தின் தர்மபால திட்டத்தைப் புதுப்பித்து சமகாலமாக்க மிகவும் ஆர்வமாக இருந்தனர். சுவாரஸ்யமாக, இந்த முயற்சிகள் எதுவும் இதுவரை சிங்கள தேசிய திட்டத்திற்காக நியாயமான போர் பற்றிய எந்த பௌத்தக் கோட்பாட்டையும் உருவாக்கவில்லை, தேரவாத பௌத்தம், அதன் நவீன இலங்கை அரசியல் பதிப்புகளில் கூட, வன்முறை பற்றிய கருத்துகளில் நம்பகத்தன்மையை உற்பத்தி செய்வதற்கு எந்த மனோதத்துவ அல்லது நெறிமுறை ஆதாரங்களையும் கொண்டிருக்கவில்லை என்பதை நிரூபிக்கிறது.

இன்று புத்த மத அரசியல் தர்மத்தின் தீவிரமான போர்க் குணமிக்க மற்றும் வன்முறை சார்ந்த மறு உருவாக்கங்களை மக்கள் நிராகரிக்கும் சூழல் தோற்றம் பெற்றாலும் அது பிரதான நீரோட்டமாகவில்லை. ஆழமான அரசியல் நெருக்கடியில் பல இன சமூகத்தின் அரசியல் யதார்த்தங்களுக்குப் பதிலளிக்கத் தவறிய பௌத்தத்தை மறு விளக்கம் செய்ய முயல்வோர் மெல்லிய பன்மைத்துவத்தின் நெறிமுறை-அறிவுசார் வாதங்களை முன்வைத்து சகிப்புத்தன்மையின் பௌத்த நெறிமுறைக் கொள்கையின் அடிப்படையில் கட்டமைக்க முயல்கிறது. ஆனால் அதைப் பிரதான செல்நெறியாக்க நீண்டகாலம் பிடிக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மன வலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத் தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம். கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெருந்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல; தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மேலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம். எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இறங்குதுறைகள் இன்மையால் சிரமம்



கிளிநொச்சி-பூநகரி பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் இறங்கு துறைகள் இன்மையால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்றொழில் பிரதேசமான பூநகரி பிரதேசத்தில் 17 கடற்றொழில் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இதில் கிட்டத்தட்ட 4,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறனர்.

இந்த நிலையில், இரணை மாதா நகர் மற்றும் முழங்காவில் பள்ளிக்குடா, நாச்சிகுடா, கௌதாரி முனை போன்ற இடங்களிலுள்ள இறங்கு துறைகள் சேதமடைந்தும் ஆழமற்று காணப்படுவதனால் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்று வருவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

– யது பாஸ்கரன்

300ஆவது தகவல் தொழினுட்ப (IT) ஆய்வு கூடத்தை

# வழங்கியது கொமர்ஷல் வங்கி

இலங்கையில் டிஜிட்டல் கல்வியறிவை அதிகரிப்பதற்கான கொமர்ஷல் வங்கியின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரசார செயற்பாடானது, 300ஆவது தகவல் தொழினுட்ப (IT) ஆய்வுகூட நன்கொடையை நிறைவு செய்ததன் மூலம் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மைல்கல்லை எட்டியுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்சீன், பிரதித் தலைவர் ராஜா சேனாநாயக்க, முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, பிரதம நிதியியல் அதிகாரி நந்திக புத்திபால மற்றும் பிரதி பொது முகாமையாளர் - சில்லறை வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல், ஹஸ்ரத் முனசிங்க ஆகியோர், வங்கியின் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு நிதியத்தின் அறக்காப்பாளர்களாக திகழும் நிலையில் வங்கியின் சார்பில் இவர்களின் பிரதிநிதித்துவதுடன், இந்த முக்கியமான நிகழ்வானது பயனாளிகள் பாடசாலையான மினுவாங்கொடை, நாலந்த ஆண்கள் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.





கொமர்ஷல் வங்கியினால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஒவ்வொரு தகவல் தொழில்நுட்ப (IT) ஆய்வு கூடமும் புதிய கணினிகள் மற்றும் பாகங்கள் மற்றும் தளபாடங்களுடன் அமைந்துள்ளதுடன் மேலும் பல வருடங்களாக பல தொகுதி மாணவர்களால் ஆய்வு கூடங்கள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக வங்கியால் அவ்வப்போது பராமரிக்கப்பட்டு மேம்படுத்தப்படுகிறது. பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கிய தகவல் தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்கள் மூலம் ஏற்கெனவே 300,000க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளதாக வங்கி மதிப்பிட்டுள்ளது.

இலங்கையில் கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வுத் துறையில் டிஜிட்டல் தொழில்நுட்பக் கல்வியே மிகப்பெரிய செயலாக்கப் பணியாகும். நன்கொடையாக வழங்கப்பட்ட 300 தகவல் தொழினுட்ப (IT) ஆய்வு கூடங்களை தவிர, 165 பாடசாலைகளை டிஜிட்டல் கற்றல் வசதிகளுடன் கூடிய தேசிய ஸ்மார்ட் பாடசாலைகளாக்கும் முயற்சியில் முக்கிய பங்காளியாக வங்கி தன்னை நிலைநிறுத்தியுள்ளது. மாணவர்கள் எளிதாகக் கற்க வசதியாக நடைமுறை வீடியோக்கள் மற்றும் விளக்கக்காட்சிகளுடன் கூடிய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பாடசாலை பாடத்திட்ட உள்ளடக்கத்திற்கும் வங்கி நிதியுதவியளித்துள்ளது. மாணவர்களின் சிந்தனை ஆற்றலை மேம்படுத்துவதற்காக 170 ஸ்மார்ட் வகுப்பறைகள் (STEM) மற்றும் 120 கணித ஆய்வு கூடங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

3,000 மாணவர்கள் CISCO நெட்வேர்க்கிங் அகடமி மூலம் தகுதி பெற வழியமைத்துள்ளதுடன் மற்றும் மாணவர்களுக்கு கோடிங் திறனை வழங்க கோடிங் கழகங்களை நிறுவுவதன் மூலம் அரசாங்க பாடசாலைகளில் மென்பொருள் கற்றல் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

## ‘SLT-MOBITEL’இன் சுகாதார பராமரிப்பு முகாம்







SLT-MOBITEL மற்றும் eChanneling ஆகியன வெசாக் பௌர்ணமியை முன்னிட்டு, நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் குழுமத்துடன் இணைந்து, ‘சம்பந்தியாவே தஹமி சத்காரய சுவ சஹன சுகாதார முகாம்’ எனும் தலைப்பில் சமூக சுகாதார முகாமை ஏற்பாடு செய்திருந்தன. இரத்மலானை மற்றும் மொரட்டுவ பகுதிகளைச் சேர்ந்த சமூகத்தாரின் நலனை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த முகாமினூடாக, இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த வசிப்போருக்கு இலவச குருதி மற்றும் நீரிழிவு பரிசோதனை, இலவச electrocardiogram (ECGs) பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்கல் போன்றன வழங்கப்பட்டிருந்தன. தகைமை வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் இந்த நிகழ்வில் பிரசன்னமாகியிருந்ததுடன், போஷாக்கு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் அமர்வுகளை முன்னெடுத்திருந்தனர்.

SLT சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி, மொபிடெல் பிரதம வணிக அதிகாரி இசுரு திசாநாயக்க, eChanneling வணிக அபிவிருத்தி தலைமை அதிகாரி மோஹன் அஜித்குமார், SLT மெட்ரோ 02 மாகாண செயற்பாடுகள் பிரதி பொது முகாமையாளர் லிதிர குருகே, நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி ரசிக திலகரட்ன மற்றும் SLT-MOBITEL இன் இதர சில அதிகாரிகளும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

சமூகத்திடமிருந்து இந்த சுகாதார முகாமுக்கு பெருமளவு ஈடுபாடும் வரவேற்பும் காணப்பட்டதுடன், இந்த இலவச மருத்துவ சேவைகளிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் பயன்பெற்றனர். வசிப்போருக்கு வழங்கப்பட்ட இனங்காணல் பரிசோதனைகளின் மூலமாக நிபுணத்துவ வழிகாட்டல்களை பெற்றுக் கொள்ள முடிந்தது. சமூகத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை SLT-MOBITEL ஊக்குவித்திருந்தது. மலிபன் பிஸ்கட்ஸ் மற்றும் ‘பரம்பரா’ பாரம்பரிய ஊதுவத்திகளும் இந்தத் திட்டத்தில் SLT-MOBITEL உடன் கைகோர்த்திருந்தன.

சுகாதார முகாமில் பங்கேற்க முடியாமல் போனவர்களுக்காக SLT-MOBITEL இனால் டிஜிட்டல் அணுகலுக்கான வசதி eChanneling ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. eChanneling கட்டமைப்பினூடாக இலவச ஒன்லைன் மருத்துவ ஆலோசனைகளைப் பெறக்கூடிய வசதியும் வழங்கப்பட்டது. சௌகரியமான மெய்நிகர் சேவையினூடாக, தமது வசிப்பிடங்களில் இருந்தவாறே நிபுணத்துவ மருத்துவ ஆலோசனையை நாடிய நபர்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

சமூக பொறுப்புக்கூரல் மற்றும் சமூகத்துக்கு மீள வழங்கல் என்பதில் கவனம் செலுத்தும் நிறுவனம் எனும் வகையில் SLT-MOBITEL இனால், முன்னெடுக்கப்பட்ட சுகாதார முகாமினூடாக, சமூகத்தாருக்கு சுகாதாரப் பராமரிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, தமது சுகாதார நலனுக்கு முன்னுரிமையளிக்க தனிநபர்களை தூண்டுவதாக அமைந்திருந்தது. வெசாக் பௌர்ணமியை முன்னிட்டு SLT-MOBITEL இனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வினூடாக, சிறந்த சுகாதாரத்தை வழங்கி, சமூகத்துக்கு பங்களிப்பு வழங்க முடிந்திருந்தது.



## தகிப்பு

கட்டுடைப்புப் போர்களும்
சமவுரிமைச் சமர்களும்
கண்ணெதிரில் மங்கலாக....
பிறப்பிலோர் பேதமிது
பெண்ணான சோகமிது

காற்சட்டை சேட் அணிந்து
காதினில் கடுக்கன் மாட்டி
பரட்டைத் தலைவேசத்தில்
கையிலே பிரம்பெடுத்து
தென்னம் பிள்ளைக்கு
ஆசானான அந்தநாளில்

ஒற்றைஉடல் கிழித்து ஒழுகிய இரத்தமது
அத்தனை துணிச்சலும் அடக்கி
மூலையில் அமர்த்திட

புத்தகம் சுமந்ததென்ன
புது வண்டி ஊர்வலமென்ன
நட்புக்கள் சேட்டையென்ன
நெடுந்தூரப் பயணமென்ன
அத்தனையும் மறக்கணுமே
வேஷங்கள் தரிக்கணுமே

கருவாகிப் பின்னுடைந்து
கழிவாகிப் போறவலியோடு
பழிதாங்கிவாழப் பழகணுமே
பெண்ணெனும் பேதையிவள்

இளைப்பாறநிழல் தேடி
இரவின் மடிக்குள் இடறிவிழுந்து
வசதிக்கு வாய்த்த விதி
வலிகளை விழுங்கிக் கொள்கிறது

வார்த்தைகள் வற்றி
பேச்சுக்கு வாய்ப்பிளந்த
அடங்காதவாய்க்காரி
அழுதுதான் தீர்ப்பதுவோ!

முற்றுப்புள்ளிவைக்க
கிழிந்தபுத்தகத்தில்
இன்னமும் நிதானமாய்
பக்கங்கள் புரட்டப்படுவதனால்...
தாங்க இயலாது தகிக்கும் தாய்
வயிற்றுவெப்பம்
தணித்திடும் போராட்டம்
தொடர்கதையல்லவே!

-ஏழாலை அகரா-



## புத்தகங்கள்

‘நான்
காலாற நடந்து
செல்லும் புத்தக
சாலையின் இரு மருங்கிலும்
நறுமணக் கவிதையின்
வாசம்...

சொற்களின் இதழ்களில்
தித்திக்கும் தேன்சுவை

பக்கங்கள் புரட்டபுரட்ட
மண் வாசனை மணம்
வார்த்தை வரிகளில்

மொத்தத்தில் இந்த
புலம்பெயர் தேசத்தில் எனக்கு
கிடைத்த இன்னுமோர்
உற்றதுணை இந்த
புத்தகங்கள்...

-கிறிஸ்டி குறூஸ்-
லண்டன்



## சொற்பம் கண்ணீர்

அல்-ஜஸீரா
பலஸ்தீனக் குழந்தைகளை
திரையில் காட்டிக் கொண்டிருந்தது
எங்களைஅறியாது
கண்ணீர் வழிகிறது
மிக அண்மையில் அவர்களின் பசியும்
காயங்களும் தேடுதல்களும்
காத்திருத்தலும் தெரிகின்றன...

எங்கள் பிள்ளைகள் குதூகலமாக
விளையாடுகிறார்கள்
நிறையவேவிளையாட்டுபொம்மைகள்
ஆயினும்
புதிதுபுதிதாகக் கேட்கிறார்கள்...

பெருநாளுக்கு இப்போதிருந்தே
புதியஉடைஎடுக்கும்
தீவிரம் மக்களிடம் தெரிகிறது
கடைத்தெருக்கள்
மனிதராலும் பொருட்களாலும்
நிறைந்துள...

நாங்கள் மகிழ்ச்சியாக வாழுகிறோம்
மூன்றுவேளைஉணவு
இடையில் பசிக்கிறது
மீண்டும் உணவு...

ருசியான சாப்பாடு இல்லாவிட்டால்
சிலவீடுகளில் கணவரும் பிள்ளைகளும்
சண்டை இடுகிறார்கள்...

எங்களின் அலுமாரிகள்
நிரம்பிவழிகின்றன
மீண்டும் புதிதுபுதிதாகவாங்குகிறோம்..

நாங்கள்
சின்னச்சின்ன விஷயங்களுக் கெல்லாம்
கோபித்துக் கொள்கிறோம்...

ஞாபகங்களை பல வடிவங்களில்
சேமித்து வைத்துள்ளோம்
இன்னும் அடுத்த
தலைமுறைக்கென்று
சிலதை பத்திரப் படுத்துகிறோம்...

இனச் சுத்திகரிப்பு தொடர்ச்சியாக
செயற்படுத்தப் படும் அந்நிலத்தே
ஞாபகங்கள், ஆவணங்கள் சகிதம்
உயிர்கள் பல புதையுண்டு போயின...

அல்-ஜஸீராவைப் பார்க்கும் போது
கண்ணீர் வருகிறது
ஆனால்,
அந்தக் குழந்தைகளைப் பார்த்த
பின்னரும்
நாங்கள் வாழ்வில்
எதையும் குறைத்துக்கொள்ள
முடியாதுள்ளது...


எங்களுக்கும் இவ்வாறானதோர்
நிலைவரலாம்

கண்ணீர் வருகின்றது
காட்சிகளைக் கண்டவுடன்
கண்ணீர் வருகின்றது.
சொற்ப நேரம்தான்
மிகச் சொற்ப நேரம்தான் வருகின்றது.

- பாலையூற்று அஷ்ரபா நூர்தீன் -

# கொழும்பில் புத்தக கண்காட்சி





வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் புத்தக கண்காட்சி நடைபெறவுள்ளது. வெள்ளிக்கிழமை (21) ஆரம்பமாகும் இந்த புத்தக கண்காட்சி, இம்மாதம் 22, 23ஆம் திகதிகளில் நடைபெறும்.

புத்தக கண்காட்சி, ஆய்வரங்குகள், உரைகள், கலை நிகழ்வுகள் என புத்தகங்கள், வாசிப்பு, எழுத்து, பரவலாக்கம் எனும் கருத்தாக்கத்தினை இந்த நிகழ்வுகள் முன்னிறுத்தவுள்ளன.

புத்தகக் கண்காட்சி என்பது புத்தகங்கள், வாசிப்பு, எழுத்து, பரவலாக்கம் என்கின்ற ஒரு நீண்டகால செயற்திட்டமாகும், பாடசாலை மட்டத்தில் இருந்து வாசிப்பின் மீதான ஆர்வத்தினையும் ஈடுபாட்டினையும் ஏற்படுத்துவதற்கான அடிப்படைச் சூழலை படிப்படியாகக் கட்டி எழுப்புவதே நோக்காகும். மாணவர்கள், பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக சக்திகள் என அனைவரதும் பங்களிப்பு அவசியமாகும்.

எங்கள் இந்த செயற்றிட்டம் தமிழ் பிரதேசங்களில் மேற்கொள்பவர்களின் ஆதரவில் தான் நடைமுறைப் படுத்தப்பட்டவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம், தென்னிலங்கைப் பிரதேசங்கள் என இதன் செயற்பட்டுத் தளமாகும். இப்பிரதேசங்கள் இந்த எமது செயற்திட்டத்தினை உறிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான, தேவையையும், அவசியத்தையும் கொண்டிருப்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

இந்த திட்டத்தின் சமூகப் பெறுமானமும், முக்கியத்துவமும் கருதி, இதற்கு ஆதரவும், பங்களிப்பும் வழங்க வேண்டியவர்களாக, புகலிட நாடுகளில் வாழ்கின்றவர்களும், சமூக சக்திகளும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவு வளர்ச்சி, ஆரோக்கியமான சமூக உருவாக்கத்தில் அக்கறை கொண்ட அனைவரும் இந்த செயற்திட்ட, நடைமுறை இயக்கத்தில் பூரணமாகப் பங்காற்றுவது இன்றைய காலகட்டத்தில், நாம் கூட்டாக இணைந்து ஆற்றும் ஒரு மகத்தான பணியாகவும், பங்களிப்பாகவும் அமையும். இந்த வகையில், இலங்கையரும் வெளிநாடுகளிலும் வாழும் கல்வியலாளர்கள், சமூக அறிவு, பண்பாட்டுத்துறை சார்ந்தோர், சமூக செயற்பாட்டாளர்கள் இதன் மற்றுமொரு பங்களிப்பு பகுதியினராகும்.

செயற்பாட்டுத் திட்ட முன்னெடுப்பாளர்களாக செயலூக்கத்துடன் முன்வந்து, பொறுப்புகளை எடுத்துச் செயல்படுத்துமாறு இந்த சந்தர்ப்பத்தில் அனைவரையும் வேண்டுகிறோம். இது ஒரு கூட்டுச் செயற்பாடாகும்.

சமூக அபிவிருத்தி, மானிட வளர்ச்சியுடன், மக்களையும், சமூகங்களையும், பிரதேசங்களையும் ஒன்றிணைத்து நமது சமூகத் தளத்தில் ஒருபடி முன்செல்ல நமக்கான இன்னுமொரு வாய்ப்பை இத்திட்டம் கொண்டிருக்கிறது.

புத்தகக் கண்காட்சியில், தமிழகத்திலுள்ள பல பதிப்பகங்களும். இலங்கை பதிப்பகங்களும் கலந்து கொள்கின்றன. ஈழத்து எழுத்தாளர்களுக்கான தனி அரங்கும் உள்ளது. இந்த அரங்கில் ஈழத்து எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் தமது நூல்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சி திட்டத்தில் தமிழகத்தில் இருந்து பேச்சாளர் கதை சொல்லி பவா செல்லதுறை, எழுத்தாளர் பெருமாள் முருகன், கர்நாடக இசைக் கலைஞர் டி.எம்.கிருஸ்ணா, உலகறிந்த தமிழாய்வாளர் முனைவர் இரா.வெங்கடாசலபதி, பதிப்பாளர் கண்ணன் சுந்தரம் உட்பட இலங்கையிலுள்ள கல்வியாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

ஆய்வரங்குகளில், தமிழக ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும் கலைஞர்களும் பதிப்பாளர்களும் கலந்து கொள்ளும் அதேநேரம், இலங்கையின் கல்வியலாளர்களும், எழுத்தாளர்களும் பங்கு கொள்ளவுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தோரும் தமது பிரதேச நிலை பற்றிய ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

லண்டனில் பதிவு செய்யப்பட்ட சமூக நிறுவனமான, மானுடம் அமைப்பு, இத்திட்டத்தினை முன்னெடுக்கிறது. மதகு அமைப்பு இதனை ஒருங்கிணைக்கிறது. இலங்கையிலுள்ள ஏனைய அமைப்புகளும், தனி நபர்களும் இத்திட்டத்துடன் இணைந்து செயற்பட முடியும். இத்துறை சார்ந்து ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரையும், இந்த மூன்று நாள் நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கிறோம். நமது தமிழ் மொழித் தளத்தில், நீண்ட காலத்தின் பின் நடைபெறவுள்ள, முக்கியமாக அறிவியல், பண்பாட்டு ஒன்று கூடுகை இது என்பது குறிப்பிடத்தக்கது.






# சர்வதேச யோகா தினம்

உலகளாவிய நிகழ்வைக் கொண்டாடும் வகையில், சர்வதேச யோகா தினம் (International yoga Day) ஆண்டுதோறும் ஜூன் 21ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நாள் யோகா பயிற்சியின் நன்மைகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## யோகா என்றால் என்ன?

யோகா என்பது உடல் நிலைகள் (ஆசனங்கள்), சுவாச நுட்பங்கள் (பிராணாயாமம்) மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்தத் தியானம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு முழுமையான பயிற்சியாகும். இது மனதையும் உடலையும் குணப்படுத்த உதவுகிறது. இது நெகிழ்வுத்தன்மை, வலிமை மற்றும் சமநிலையை மேம்படுத்துகிறது. அதே நேரத்தில் மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் குறைக்கிறது.

உடல் தோரணைகள் சுழற்சியை மேம்படுத்துகின்றன மற்றும் உடலின் இயற்கையான குணப்படுத்தும் செயல்முறைகளைத் தூண்டுகின்றன. அதே நேரத்தில் யோகாவின் தியான அம்சங்கள் மனத் தெளிவு, உணர்ச்சி நிலைத்தன்மை மற்றும் உள் அமைதி உணர்வை வளர்க்கின்றன. ஒன்றாக, இந்த கூறுகள் மனதுக்கும் உடலுக்கும் இடையே ஒரு இணக்கமான சமநிலையை உருவாக்குகின்றன. மேலும் ஆரோக்கியமான, நெகிழ்வான நிலையை மேம்படுத்துகின்றன.

நினைவகம், கவனம், விழிப்புணர்வு, சிந்தனை மற்றும் மொழி ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கும் மூளையின் பாகங்களை யோகா பலப்படுத்துகிறது. யோகா ஆசனங்கள் ஒரு நபரின் உடல் நெகிழ்வுத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் வலிமையை அதிகரிக்கக்கூடும். அதே நேரத்தில் சுவாசப் பயிற்சிகள் மற்றும் தியானம் அதிக விழிப்புணர்வை வளர்ப்பதற்கும் கவலையைக் குறைப்பதற்கும் மனதை அமைதிப்படுத்தி ஒருமுகப்படுத்தலாம்.

## சர்வதேச யோகா தினத்தின் வரலாறு

2014 செப்டெம்பர் 27 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பிரதமர் நரேந்திர மோடி தனது உரையின் போது சர்வதேச யோகா தின யோசனையை முன்மொழிந்தார். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதில் யோகாவின் முக்கியத்துவத்தையும், உலகளாவிய அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கான அதன் திறனையும் அவர் வலியுறுத்தினார்.

2014 டிசெம்பர் 11ஆம் திகதின்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 69/131 தீர்மானத்தை ஏற்று, ஜூன் 21ஐ சர்வதேச யோகா தினமாக அறிவித்தது. இந்தத் தீர்மானத்திற்கு 175 உறுப்பு நாடுகள் இணை அனுசரணை வழங்கியதன் மூலம் பெரும் ஆதரவைப் பெற்றது. முதல் சர்வதேச யோகா தினம் 2015 ஜூன் 21 அன்று கொண்டாடப்பட்டது, பின்னர் அது உலகம் முழுவதும் அனுசரிக்கப்படும் வருடாந்திர நிகழ்வாக மாறியுள்ளது.

## சர்வதேச யோகா தினம் 2024இன் கருப்பொருள்

சர்வதேச யோகா தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் திகதியன்று கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 10ஆவது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. கருப்பொருள் 'சுய மற்றும் சமூகத்திற்கான யோகா' என்பதாகும். யோகா, ஓர் உருமாறும் பயிற்சியாக, மனதுக்கும் உடலுக்கும் இடையிலான இணக்கம், சிந்தனை மற்றும் செயலின் சமநிலை மற்றும் ஒழுக்கம் மற்றும் நிறைவேற்றத்தின் ஒற்றுமை ஆகியவற்றை உள்ளடக்கியது. இது உடல், மனம், ஆவி மற்றும் ஆன்மாவை ஒருங்கிணைக்கிறது, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான முழுமையான அணுகுமுறையை வழங்குகிறது.

## சர்வதேச யோகா தினத்தின் முக்கியத்துவம்

உடல் ஆரோக்கிய நலன்களுக்குப் பெயர் பெற்றது யோகா. வழக்கமான யோகா பயிற்சி நெகிழ்வுத் தன்மை, வலிமை மற்றும் தோரணையை மேம்படுத்தும். இது ஆரோக்கியமான எடையைப் பராமரிக்கவும், இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது.

சர்வதேச யோகா தினம், சிறந்த உடல் ஆரோக்கியத்திற்காக யோகாவை தங்கள் அன்றாட நடைமுறைகளில் இணைக்க மக்களை ஊக்குவிக்கிறது.

## மன நலன்கள்

2024ஆம் ஆண்டிற்கான தொனிப்பொருள் மன ஆரோக்கியத்தில் யோகாவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆசனங்கள் (தோரணைகள்), பிராணயாமா (சுவாசப் பயிற்சிகள்) மற்றும் தியானம் போன்ற யோகா பயிற்சிகள் மன அழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வைக் குறைப்பதில் பயனுள்ளதாக இருக்கும். அவை மனத் தெளிவு, கவனம் மற்றும் உணர்ச்சி நிலைத்தன்மையை ஊக்குவிக்கின்றன.

இந்த நாளைக் கொண்டாடுவதன் மூலம், மனநலத்தில் யோகாவின் பங்கு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. உடல் ஆரோக்கியம், மனநலம், ஆன்மிக வளர்ச்சி மற்றும் உலகளாவிய ஒற்றுமை ஆகியவற்றை மேம்படுத்தும். சர்வதேச யோகா தினம் கொண்டாடும் போது, நமக்குள்ளும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்துடனும் நல்லிணக்கத்தை வளர்த்து, யோகாவை ஒரு வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்வோம்.




அமெரிக்காவுக்கு 'பிராண்டட்' பொருள்களின்

# நகல்களுடன் செல்லாதீர்கள்

அமெரிக்காவுக்குச் செல்வோர், பிராண்டட் பொருள்களின் நகல்கள் என்று தெரியாமலோ தெரிந்தோ வாங்கி வைத்திருந்தால், அவற்றை கொண்டு செல்லாதீர்கள். சென்றால், அவை சுங்கத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும்.

அமெரிக்கா செல்கிறோம் என்று புமா, அடிடாஸ், நைக் போன்ற உயர்தர பிராண்டட் பொருள்களை தேடித் தேடி வாங்குபவர்கள், அதற்குரிய இடங்களில் வாங்குங்கள். ஒருவேளை, பேரம் பேசி அடிமாட்டு விலைக்கு வாங்கி சபாஷ் போட்டுக் கொள்ள முயன்றால், அது போலியானதாக இருக்கலாம்,

அமெரிக்கா செல்லும்போது அவை பறிமுதல் செய்யப்பட்டு



அழிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்டோரிடமிருந்து, விமான நிலையத்தில், மிக விலைகொடுத்து வாங்கிய பிராண்டட் என்று நம்பிய போலி பொருள்களை அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையின் கண்காணிப்புப் பிரிவு, பறிமுதல் செய்துள்ளது.

ஒரு பதிவு செய்யப்பட்ட பிராண்டட் பொருளின் பெயரில் அல்லது சின்னம் கொண்ட போலி பொருள்கள் அமெரிக்காவுக்குள் நுழைவது தவறு என்கிறது விதிமுறைகள் உள்ளன.



இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய இங்கிலாந்து

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், சென். லூசியாவில் வியாழக்கிழமை (20) நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான குழு இரண்டு சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், பிரண்டன் கிங்கின் 23 (13), ஜோன்சன் சார்ள்ஸின் 38 (34), நிக்கலஸ் பூரானின் 36 (32), அணித்தலைவர் றொவ்மன் பவலின் 36 (17), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் ஆட்டமிழக்காத 28 (15) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அடில் ரஷீட் 4-0-21-1, மொயின் அலி 2-0-15-1, ஜொஃப்ரா ஆர்ச்சர் 4-0-34-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 182 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பில் ஸோல்டின் ஆட்டமிழக்காத 87 (47), ஜொனி பெயார்ஸ்டோவின் ஆட்டமிழக்காத 48 (26) ஓட்டங்களோடு 17.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் றொஸ்டன் சேஸ் 3-0-19-1, குடகேஷ் மோட்டி 4-0-32-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக ஸோல்ட் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தென்னாபிரிக்காவை இங்கிலாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், பார்படோஸில் சனிக்கிழமை (22) காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை மேற்கிந்தியத் தீவுகள் எதிர்கொள்ளவுள்ளது.

ஈரான்

ஈரானுக்கு

# கனடாவின் அதிரடி அறிவிப்பு



ஈரானின் IRGC இராணுவ படையை தீவிரவாத அமைப்பாக கனடா அறிவித்துள்ளது.

பல ஆண்டுகளாக எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஈரானை விட்டு வெளியேறியோரிடமிருந்து வந்த அழுத்தங்களுக்குப் பிறகு, கனடா இறுதியாக IRGC-யை ஒரு தீவிரவாத அமைப்பாகப் பட்டியலிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை உலகளாவிய தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான கனடாவின் முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

மேலும், இதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஈரானிய அதிகாரிகள், உயர் ஐ.ஆர்.ஜி.சி. உறுப்பினர்கள் உட்பட பலர் கனடாவுக்குள் நுழையத் தடை செய்யப்படுவார்கள்.


அதேசமயம், ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர காவல் படை (IRGC) என்பது ஈரானில் ஒரு சக்திவாய்ந்த இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பாகும்.

இது உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது மற்றும் சுமார் 190,000 க்கும் மேற்பட்ட செயல்படக்கூடிய பணியாளர்களைக் கொண்டுள்ளது.

இவர்கள் ஈரானின் மூலோபாய ஆயுத திட்டத்தைக் கண்காணிக்கும் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படையைக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ஐ.ஆர்.ஜி.சி. மத்திய கிழக்கில் தனது இரகசிய நடவடிக்கைப் பிரிவான குத்ஸ் படையின் (Quds Force) மூலம் செல்வாக்கு செலுத்துகிறது. எனவே குத்ஸ் படை ஏற்கனவே கனடாவால் தீவிரவாதக் குழுவாகப் பட்டியலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்கா



மக்காவில் ஹஜ் புனித

# யாத்திரீகர்கள் 922 பேர் பலி

125 டிகிரி வெப்ப அலையால் ஹஜ் பயணிகள் 922 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மக்காவின் வீதிகளில் சடலங்கள் பரவிக் கிடப்பதாக கூறப்படுகின்றது.

இஸ்லாமிய மக்கள் தங்கள் வாழ்வியல் கடமைகளில் முக்கியமானதாக கருதப்படும் புனித ஹஜ் யாத்திரைக்காக ஆண்டுதோறும் சவூதி அரேபியாவில் உள்ள மக்கா மற்றும் மதினா செல்வது வழக்கம்.

இந்தாண்டு பல்வேறு நாடுகளை சேர்ந்த பலர் ஹஜ் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், சவூதியில் வழக்கத்தைவிட இந்தாண்டு அதிகளவில் வெப்பம் பதிவாகி வருகிறது. இதனால் அந்நாட்டு மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், ஹஜ் பயணம் மேற்கொண்டுள்ளவர்கள், குடைகளை பிடித்தபடி, தண்ணீர் அருந்தியபடி தங்கள் யாத்திரையை மேற்கொண்டுள்ளனர். மக்காவில் அல் ஹராம் பகுதியில் கடுமையான வெப்பம் நிலவியதாக கூறப்படுகிறது. இதனால் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

தற்போது இறந்தவர்களின் எண்ணிக்கை 922ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் எகிப்தை சேர்ந்தவர் 600 என்றும் இந்தியர்கள் 80 என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் வீதியெங்கும் சடலங்கள் கிடப்பதாக கூறப்படுகின்றது.

இறந்தவர்கள் சடலங்கள் மக்காவுக்கு அருகில் உள்ள அல்-மொயிசம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், 250 பேர் சுயநினைவு இன்றி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதனால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

ஹஜ் புனித யாத்திரைக்கு முறைப்படி விசா எடுத்து வரும் மக்களுக்கு குளிர்சாதன வசதி உட்பட வேண்டிய வசதிகளை சவூதி அரசு செய்கிறது.

அவ்வாறு பதிவு செய்யாத மக்கள் நீண்ட நேரம் வெயிலில் இருக்கும் காரணத்தாலும், உணவு, நீர், குளிர்சாதன வசதி மற்றும் முறையான தங்கும் வசதி இல்லாததாலும் அதிகம் பேர் பலியானதாக கூறப்படுகிறது.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடர்:

# கிங் விளையாடுவது சந்தேகம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் எஞ்சியுள்ள போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் பிரண்டன் கிங் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகியுள்ளது.

இங்கிலாந்துக்கெதிராக வியாழக்கிழமை (20) நடைபெற்ற சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் விலாவென்புப் பகுதியில் உபாதைக்குள்ளானமையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இப்போட்டியின் 13ஆவது பந்தை எதிர்கொண்டமையடுத்து கிங் போட்டியிலிருந்து விலகியிருந்தார்.




இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# ஐ.அமெரிக்காவை வென்றது தென்னாபிரிக்கா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 கிண்ணத் தொடரில், அன்டிகுவாவில் புதன்கிழமை(19) நடைபெற்ற ஐக்கிய அமெரிக்காவுடனான குழு இரண்டு சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஐ.அமெரிக்கா

தென்னாபிரிக்கா: 194/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: குயின்டன் டி கொக் 74 (40), ஏய்டன் மார்க்ரம் 46 (32), ஹென்றிச் கிளாசென் ஆ.இ 36 (22), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆ.இ 20 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: சௌரஃப் நெட்ரவல்கர் 2/21 [4], ஹர்மீட் சிங் 2/24 [4])

ஐ.அமெரிக்கா: 176/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: அன்ட்ரைஸ் கௌஸ் ஆ.இ 80 (47), ஹர்மீட் சிங் 38 (22), ஸ்டீவன் டெய்லர் 24 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 3/18 [4], கேஷவ் மஹராஜ் 1/24 [4])

போட்டியின் நாயகன்: குயின்டன் டி கொக்





# சம்பியனானது அன்னமலை மகா வித்தியாலய அணி

வி.ரி.சகாதேவராஜா

சம்மாந்துறை வலய 16 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட சம்பியனாக நாவிதன்வெளி-அன்னமலை மகா வித்தியாலய அணி, வெற்றி வாகை சூடியது.

தெலுங்கானா

பேருந்து நிலையத்தில் பிறந்த

# குழந்தைக்கு சிறப்பு அறிவிப்பு

தெலுங்கானா மாநிலம், கரீம்நகர் மாவட்ட பேருந்து நிலையத்தில், கடந்த 16ஆம் திகதி குமாரி என்ற கர்ப்பிணிப் பெண், தனது கணவருடன் பத்ராசலம் செல்வதற்காக அங்கு வந்த நிலையில், அப்போது அவருக்கு திடீரென்று பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.

இதில் பதற்றமடைந்த அவரது கணவர் உதவிக்காக மாநில போக்குவரத்துக் கழக ஊழியர்களை அழைத்துள்ளார். இதனையடுத்து, உடனடியாக அம்புலன்ஸக்கு தகவல் கொடுக்கப்பட்டபோதும், அம்புலன்ஸ் வருவதற்குள் குமாரிக்கு பிரசவ வலி அதிகமானதால், அங்கிருந்த போக்குவரத்துக் கழக பெண் ஊழியர்கள் பேருந்து நிலையத்திலேயே அவருக்குப் பிரசவம் பார்த்துள்ளனர்.

இதில், குமாரிக்கு பெண் குழந்தை பிறந்ததைத் தொடர்ந்து, தாயும், குழந்தையும் அம்பியூலன்ஸ் மூலம் அருகே உள்ள வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு அவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதே சமயம் பேருந்து நிலையத்திலேயே பிரசவம் பார்த்து பெண் குழந்தை பிறந்த சம்பவம் அம்மாநிலத்தில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அக்குழந்தை தனது வாழ்நாள் முழுவதும் மாநில அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யச் சிறப்பு பாஸ் வழங்கப்படும் என தெலுங்கானா மாநில வீதி போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

# புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி

எம்.யூ.எம்.சனூன்

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு, புத்தளம் முள்ளிபுரம் Black Fire குழுவினரின் ஏற்பாட்டில், பாரம்பரிய கயிறு இழுக்கும் போட்டிகள் முள்ளிபுரம் முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் பெருநாள் தினத்தன்று மாலை இடம்பெற்றது.

புத்தளம் உப்பு உற்பத்தியாளர் நலன்புரிச் சங்க தலைவரும், புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ரனீஸ் பதூர்தீனின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்துகொண்டார்.

கயிறுழுத்தல் போட்டியில் புத்தளம் நகர குழுக்கள் மட்டுமல்லாது மாவட்ட மட்டத்திலிருந்தும் பல அணிகள் கலந்து கொண்டதுடன், முதலிடத்தை சிலாபம் அணியும், இரண்டாமிடத்தை புத்தளம் பாஷா பாய் அணியும், மூன்றாமிடத்தை சில்வர்லைன் அணியும் பெற்றுக்கொண்டன.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 21, ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.